## தமிழகத்தில் இனி சிபிஐ விசாரணைக்கு மாநில அரசின் முன் அனுமதி தேவை: தமிழக அரசு அதிரடி




**சென்னை:** சிலவகை வழக்குகளுக்கென சிபிஐ-க்கு வழங்கப்பட்டிருந்த பொதுவான முன் அனுமதியை தமிழக அரசு திரும்பப்பெற்றுள்ளது. இதன்படி மத்திய புலனாய்வுத் துறை, தமிழத்தில் இனி விசாரணை மேற்கொள்வதற்கு முன்பாக, தமிழக அரசின் முன் அனுமதியை பெற்று விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மத்திய புலனாய்வுத் துறை எந்த ஒரு மாநிலத்தில் விசாரணை மேற்கொள்வதாக இருந்தாலும், அந்தந்த மாநில அரசின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என டெல்லி சிறப்புக் காவல் அமைப்புச் சட்டம் 1946, (Delhi Special Police Establishment Act, 1946 Central Act XXV of 1946) ன் பிரிவு 6ன்படி வகுக்கப்பட்டுள்ளது.

கடந்த 1989 மற்றும் 1992ம் ஆண்டுகளில், மேற்படி சட்டத்தின் கீழ், சிலவகை வழக்குகளுக்கென வழங்கப்பட்டிருந்த பொதுவான முன் அனுமதியை, இன்று தமிழக அரசு திரும்ப்பெற்று ஆணையிட்டுள்ளது. இதன்படி மத்திய புலனாய்வுத் துறை, தமிழத்தில் இனி விசாரணை மேற்கொள்வதற்கு முன்பாக, தமிழக அரசின் முன்அனுமதியை பெற்று, விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.


இதுபோன்ற, ஆணையினை ஏற்கெனவே மேற்குவங்கம், ராஜஸ்தான், கேரளா, மிசோரம், பஞ்சாப், தெலங்கான போன்ற பல்வேறு மாநிலங்கள்

EVA STALIN IAS ACADEMY

பிறப்பித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நேற்று அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு சொந்தமான வீடு உள்ளிட்ட இடங்களில் சோதனை நடத்திய அமலாக்கத்துறை அதிகாரிகள், அவரை நள்ளிரவில் கைது செய்தனர். இதையடுத்து அவரை காவலில் எடுத்து விசாரிக்க கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில், அமலாக்கத்துறை தாக்கல் செய்துள்ள வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு வருகிறது என்பது நினைவுகூரத்தக்கது.

**உயிர்த்தியாகம் செய்த அமைதிப்படை வீரர்களுக்கு ஐ.நா. தலைமையகத்தில் நினைவிடம் - இந்தியா முன்மொழிந்த தீர்மானம் ஏற்பு**



**நியூயார்க்:** உயிர்தியாகம் செய்த அமைதிப்படை வீர்களுக்கு ஐ.நா தலைமையகத்தில் நினைவுச் சுவர் எழுப்ப வேண்டும் என்று கோரி இந்தியா கொண்டு வந்த தீர்மானம் சுமார் 190 நாடுகளின் ஒப்புதலுடன் ஏற்கப்பட்டுள்ளது.

வன்முறையால் பாதிக்கப்படும் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக ஐநா சார்பில் அமைதிப் படை செயல்பட்டு வருகிறது. இதில், பல்வேறு நாடுகளின் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியின்போது அமைதிப்படை வீரர்களில் பலர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உயிர்தியாகத்தைப்

போற்றும் வகையில், ஐநா தலைமையகத்தில் நினைவுச் சுவர் எழுப்ப வேண்டும் என்று ஐ.நா. பொது அவையில் இந்தியா நேற்று வரைவுத் தீர்மானத்தை கொண்டு வந்தது.

ஐ.நா.,வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா கம்போஜ் இந்த வரைவுத் தீர்மானத்தை வாசித்தார். அப்போது, "உலகில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் 125 நாடுகளைச் சேர்ந்த 10 லட்சத்துக்கும் மேற்பட்ட அமைதிப்படை வீரர்கள் 71 பகுதிகளில் பணியாற்றி இருக்கிறார்கள். தற்போதும்கூட மோதல்நிகழும் பகுதிகளில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமைதிப்படை வீரர்கள் பணியாற்றி வருகிறார்கள். அமைதி காக்கும் பணியில் இதுவரை 4,200 வீரர்கள் உயிர் தியாகம் செய்திருக்கிறார்கள்" என ருச்சிரா கம்போஜ் தெரிவித்தார்.

இந்தியாவின் முயற்சியால் கொண்டு வரப்பட்ட இந்த வரைவுத் தீர்மானம், இந்தியா, வங்கதேசம், கனடா, சீனா, டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், இந்தோனேஷியா, ஜோர்டான், நேபாள், ருவாண்டா, அமெரிக்கா உள்ளிட்ட 18 நாடுகளால் ஐ.நா. பொது அவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வரைவுத் தீர்மானம் ஓட்டெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது. சுமார் 190 நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ட்விட்டர் பதிவில், "ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் இந்தியாவினால் முன்மொழியப்பட்ட, உயிர்தியாகம் செய்த அமைதிப் படை வீரர்களுக்கு புதிய நினைவுச் சுவர் அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் மகிழ்ச்சி. இந்த தீர்மானம் 190 நாடுகளின் ஆதரவை பெற்றுள்ளது. அனைவரின் ஆதரவுக்கும் நன்றி" என தெரிவித்துள்ளார்.

## பொது சிவில் சட்டம்: மத அமைப்புகள், பொது மக்களிடம் கருத்துக் கேட்கும் 22-வது சட்ட ஆணையம்

**புதுடெல்லி**: நாடு முழுமைக்கும் பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பாக பொதுமக்கள், மத அமைப்புகள் தம் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று 22வது சட்ட ஆணையம் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு மக்களவைத் தேர்தல்களின் போது பாஜக தேர்தல் அறிக்கைகளில் காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து நீக்கம், அயோத்தியில் ராமர்கோயில் கட்டுவது மற்றும் பொது சிவில் சட்டம்

ஆகியவை இடம்பெற்றன. இவற்றில் பொது சிவில் சட்டம் மட்டுமே தற்போது பாக்கி உள்ளது. இதையும் 2024 மக்களவை தேர்தலுக்கு முன்பு அமல்படுத்த அல்லது அதற்கான முயற்சிகளில் மத்தியில் உள்ள பாஜக அரசு தீவிரம் காட்டி வருகிறது. ஆனால், பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மையினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் 22வது சட்ட கமிஷன் நேற்று (புதன்கிழமை) வெளியிட்ட அறிக்கையில், பொது சிவில் சட்டம் தொடர்பாக பொதுமக்கள், மத அமைப்புகள் கருத்துகள் தெரிவிக்கலாம் என்று கூறியுள்ளது.

ஏற்கெனவே கருத்துக் கேட்பு நடந்து 3 ஆண்டுகள் ஆகும் நிலையில் புதிதாக கருத்துகள் கேட்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் பொது சிவில் சட்டம் தொடர்பாக இந்த 3 ஆண்டுகள் இடைவெளியில் பல்வேறு நீதிமன்றங்களில் பல வழக்குகள் விசாரித்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதனால் புதிதாக கருத்து கேட்கப்படுவது அவசியமாவதாக சட்ட ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் சட்ட ஆணையத்துக்கு அதன் உறுப்பினர் செயலரின் மின்னஞ்சல் முகவரிக்கு தனிப்பட்ட முறையிலோ அல்லது சட்ட ஆணைய இணையதளத்தில் அதற்கென கொடுக்கப்பட்டுள்ள இணைப்பிலோ தெரிவிக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியானதில் இருந்து, 30 நாட்களுக்குள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை membersecretary--lci@gov.in என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாக தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2018 ஆம் ஆண்டு, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.எஸ்.சவுகான் தலைமையிலான 21வது சட்ட ஆணையம் ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது. அதில், நாட்டில் பொது சிவில் சட்டம் அவசியம் இல்லை. தற்போதைய சூழலில் அது விரும்பத்தக்கதும் அல்ல என்று தெரிவித்தது.

185 பக்கங்கள் கொண்ட அந்த ஆலோசனை அறிக்கையில், பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் நாட்டில் நிலவும் பன்முகத்தன்மைக்கு மதச்சார்பின்மை முரண்பட முடியாது. நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மை என்பதை பொது சிவில் சட்டம் மூலம் சமரசம் செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் அது தேசத்தின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஆகிவிடும் என்று தெரிவித்திருந்தது. இருப்பினும் திருமணம், விவாகரத்து

தொடர்பான சட்டங்கள் சிலவற்றை பொதுவானதாக பல்வேறு மதங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

**இந்தியா–மியான்மர்–தாய்லாந்தை இணைக்கும் நெடுஞ்சாலை: 4 ஆண்டுகளில் பயன்பாட்டுக்கு வரும்**



**கொல்கத்தா:** இந்தியா–மியான்மர்–தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகளை இணைக்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டமைப்பு இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்கம் தலைநகர் கொல்கத்தாவில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் இந்திய தொழில் மற்றும்வர்த்தக சபை (சிஐஐ) வணிக மாநாட்டை ஒருங்கிணைத்துள்ளது. இந்நிகழ்வில் தாய்லாந்து,மியான்மர் உள்ளிட்ட நாடுகளின் அமைச்சகர்கள் பங்கேற்றனர்.

**கொல்கத்தா வரை:** இந்தியா–மியான்மர்–தாய்லாந்தை இணைக்கும் முத்தரப்பு தேசிய நெடுஞ்சாலை குறித்து இந்நிகழ்வில் பேசப்பட்டது. 2,800 கிமீ தூரத்துக்கு அமைக்கப்படும் இந்த நெஞ்சாலை தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் தொடங்கி இந்தியாவில் கொல்காத்தாவில் முடிவடைகிறது.

**2,800 கி.மீ. தூரம்:** இந்தத் திட்டம் குறித்து தாய்லாந்து வெளியுறவுத் துறை இணை அமைச்சர் கூறுகையில், “மொத்தம் இந்த சாலையின் தூரம் 2,800 கிமீ ஆகும். இதில் 2,500 கிமீ இந்தியா மற்றும் மியான்மரில் அமைகிறது. குறைந்த தூரமேதாய்லாந்தில் அமைகிறது. இதனால், தாய்லாந்தில் சாலைஅமைக்கும் பணி நிறைவடைந்துவிட்டது. இந்தத் திட்டம் முழுமை பெற இந்தியா மற்றும் மியான்மரில் மீதமுள்ள தூரத்துக்கு சாலை அமைக்கப்பட வேண்டும்” என்று

தெரிவித்தார். மியான்மர் நாட்டின் வர்த்தக அமைச்சர் கூறுகையில், "இந்த நெடுஞ்சாலை அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் தயாராகிவிடும்" என்றார்.

**கோவையில் நீருக்கடியில் செல்லும் ட்ரோன் தயாரிப்பு**



கொடிசியா டிபென்ஸ் இன்னோவேஷன் அடல் இன்குபேஷன் மையத்தில், பெங்களூருவைச் சேர்ந்த தனியார் நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்டு வரும் தண்ணீருக்கு அடியில் பயன்படுத்தும் 'ட்ரோன்'. படம்: ஜெ.மனோகரன்

**கோவை:** தேசிய அளவில் கோவைக்கு பெருமை சேர்க்கும் வகையில் கொடிசியா டிபென்ஸ் இன்னோவேஷன் அடல் இன்குபேஷன் மையத்தில், கடற்படையினர் தண்ணீருக்கு அடியில் பயன்படுத்தும் ட்ரோன், ராணுவ பீரங்கி டாங்க் வாகனங்களுக்கான எல்இடி விளக்குகள் தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கோவை அவிநாசி சாலையில் அமைந்துள்ள கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கத்தின் கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில் தொழில்முனைவோர் மேம்பாட்டுக்காக 'கொடிசியா டிபென்ஸ் இன்னோவேஷன் மற்றும் அடல் இன்குபேஷன் மையம்' செயல்பட்டு வருகிறது.

அதிநவீன மற்றும் புதுமையான பொருட்கள் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது, ராணுவ தளவாடங்களுக்கு தேவையான பல புதிய பொருட்கள் வடிவமைப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இந்த மையம் செயல்படுகிறது. இங்கு, இந்தியாவிலேயே முதல் முறையாக அதிநவீன

தொழில்நுட்ப வசதியுடன் உருவாக்கப்படும் பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக கொடிசியா டிபென்ஸ் இன்னோவேஷன், அடல் இன்குபேஷன் மையத்தின் இயக்குநர்கள் சுந்தரம், ராமமூர்த்தி ஆகியோர் கூறியதாவது: தொழில்முனைவோரை மேம்படுத்தும் நோக்கத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த மையத்தில் முதல்கட்டமாக அதிநவீன மற்றும் புதுமையான பொருட்கள் தயாரிக்கும் யோசனைகளைக் கொண்டுள்ள 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர், யோசனை கட்டம், பொருட்கள் மேம்பாடு இறுதி வடிவம் உள்ளிட்ட பல்வேறு கட்டங்களில் பணியாற்றி வருகின்றனர். இங்கு, ராணுவத்துக்கு மட்டுமின்றி, பல்வேறு பொருட்கள் தயாரிப்பையும் ஊக்குவித்து வருகிறோம். இருப்பினும் எதிர்காலத்தில் ராணுவத்துக்கு பயன்படும் வகையில் பொருட்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தொழில்முனைவோரை தேர்ந்தெடுத்து வருகிறோம்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் தொழில்முனைவோருக்கு அலுவலகம், பரிசோதனைக்கு கருவிகளை பயன்படுத்திக் கொள்ளுதல் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் செய்து தரப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு, மெய்நிகர் தொழில்நுட்பம் உள்ளிட்டவை எதிர்காலத்தில் மிக முக்கிய பங்கு வகிக்க உள்ளன. இதனால் அத்துறைகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

தற்போது இந்தியாவிலேயே முதல் முறையாக கடற்படையில் பயன்படுத்துவதற்கான நீர்மூழ்கி ட்ரோன், ராணுவ டாங்க் வாகனங்களில் பயன்படுத்தப்படும் முகப்பு விளக்குகளை எல்இடி தொழில்நுட்பத்துக்கு மாற்றுவது என்பன உள்ளிட்ட 30 பொருட்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்துக்குள் பணிகள் நிறைவடைந்த பின் அவை பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும். தொழில் முனைவோர் கொண்டுள்ள தனித்திறன்களை வெளிப்படுத்த இந்த மையம் தொடர்ந்து உதவும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ராணுவ டாங்குகளுக்கான ‘எல்இடி’ பல்ப் தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ள கோவையைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தின் பொறியாளர் நாகராஜ் கூறியதாவது: இந்திய ராணுவத்தில் பயன்படுத்தப்படும் ‘பிஎம்பி’ என்ற ரகத்தை சேர்ந்த ராணுவ டாங்குகளின் முகப்பு விளக்குகளைப் பொருத்தவரை, இன்கேன்சியன்ட் என்று

சொல்லக்கூடிய பழைய மாடல் விளக்குகள் தான் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை எல்இடி விளக்குகளாக மாற்றும் முயற்சியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

சாதாரண எல்இடி விளக்குகள் தயாரிப்பு போன்று இப்பணி எளிதானது அல்ல. பாதுகாப்பு, ஆற்றல் சேமிப்பு, நீடித்து உழைக்கும் தன்மை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கொண்டு வடிவமைக்க வேண்டும். எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்குள் சிறப்பாக பொருளை தயாரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வழக்கமாக வானில் பறந்தபடி புகைப்படம் மற்றும் வீடியோக்களை எடுத்தல், கண்காணிப்பு பணி மேற்கொள்ளுதல், விளைநிலங்களில் உரம், பூச்சிக் கொல்லி தெளித்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்கு ட்ரோன் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் முதல் முறையாக பெங்களூருவை சேர்ந்த தனியார் நிறுவனம் கோவை கொடிசியா வளாகத்தில் அமைத்துள்ள மையத்தில் தண்ணீருக்கு அடியில் பயன்படுத்த உதவும் வகையில் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் இதர வசதிகளை கொண்ட ட்ரோனை வடிவமைத்து வருகிறது.

## மாமல்லபுரத்தில் இன்று தொடங்குகிறது ஜி-20 மகளிர் மாநாடு: 158 வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்பு




சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் இன்று தொடங்கும் ஜி-20மகளிர் மாநாடு தொடர்பாக, மாநாட்டின் தலைவர் சந்தியா புரேச்சா, தலைமை ஒருங்கிணைப்பாளர் தாரித்ரி பட்நாயக் ஆகியோர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தனர்.

**சென்னை**: சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ஜி-20 மகளிர் மாநாடுஇன்று (ஜூன் 15) தொடங்குகிறது. இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 158 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இன்று நடைபெறும் தொடக்கநிகழ்ச்சியில், மத்திய மகளிர் நலத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணிபங்கேற்கிறார். இதுகுறித்து மாநாட்டின் தலைவர் சந்தியா புரேச்சா, தலைமை ஒருங்கிணைப்பாளர் தாரித்ரி பட்நாயக் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பெண்கள் தலைமையிலான வளர்ச்சி, மாற்றம், செழிப்பு மற்றும்முன்னேற்றம் என்ற கருத்தை மையமாகக் கொண்டு நடைபெறும் இந்த மாநாட்டில், பெண் சாதனையாளர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் கண்காட்சி மற்றும் 8 அமர்வுகள் நடைபெற உள்ளன. இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 158 பெண் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

அடித்தட்டு மக்களின் முன்னேற்றம், பெண்களுக்கு அதிகாரம்,பாலின சமத்துவம், பொருளாதார சுதந்திரம், செயற்கை நுண்ணறிவுஆகிய 5 அம்சங்களை மையப்படுத்தி விவாதங்கள் நடத்தப்படும். ஏற்கெனவே ஜெய்ப்பூர்,அவுரங்காபாத் ஆகிய இடங்களில்நடந்த மகளிர் பணிக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை இந்த மாநாட்டில் வெளியிடப்படும் என்றனர்.

EVA STALIN IAS ACADEMY